# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# அறிவிப்பு

**2020 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சையின் மீள்ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பரீட்சை முடிவுகள் மாறிய விண்ணப்பதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாமல் போன மேன் முறையீட்டு விண்ணப்பதாரர்களிடம்ருந்து 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அழைக்கிறது.**

பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு (UGC), டிசம்பர் 29, 2021 அன்று வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான (உயர் தர) பரீட்சை இன் மீள்ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பெறுபேறுகள் மாறிய விண்ணப்பதாரர்களிடமிருந்து மற்றும் 2020/2021 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்க முடியவில்லை என்று மேல்முறையீடு செய்தவர்களிடமிருந்து இணையவழி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் 2020/2021 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக **03 ஜனவரி 2022 முதல் 10 ஜனவரி 2022 வரை** இணைய வழி மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக் கொள்ளல் பற்றிய செய்தித்தாள் விளம்பரத்தைப் பார்க்க முடியும்.

**முக்கியம்**

2020/2021 கல்வியாண்டிற்கு செல்லுபடியாகும் பல்கலைக்கழக அனுமதி கைநூலில் குறிப்பிடப்பப்பட்டுள்ள மற்ற தேவைகளை பூர்த்தி செய்து, இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி அல்லது தெளிவான புகைப்படத்தை பதிவு தபால் மூலம் அனுப்புவதுடன் apply2020@ugc.ac.lk. எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியது கட்டாயமாகும் என்பதை நினைவில் கொள்க.

மேலும், மேற்கூறிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால்/வளாகம்/ நிறுவனத்தால் ஏற்கனவே நடாத்தி முடிக்கப்பட்ட திறன்/நடைமுறைத் தேர்வுகள் கொண்ட கற்கை நெறிகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
03.01.2022